**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை–மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் நான்கு வகையான திருமண உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் திருமாங்கல்யம் செய்ய வழங்கப்படும் 4 கிராம் தங்கம் என்பதை 8 கிராமாக உயர்த்துவது மற்றும் 2016–2017 ஆம் நிதியாண்டிற்கான திட்டத் தொடராணை மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1D) எண்.37

நாள்: 05–05–2017
ஹேவிளம்பி, சித்திரை 22,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.23, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, நாள் 28–06–2011.
2. அரசாணை (நிலை) எண்.24 மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, நாள்28–06–2011.
3. அரசாணை (1டி) எண்.27 மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, நாள் 02.03.2016
4. அரசாணை (நிலை) எண்.47 சமூக நலம் (ம) சத்துணவுத் திட்டத் துறை, நாள் 23.05.2016
5. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், ந.க.எண்.3165/ இவாததி/2016, நாள் 04.08.2016.

---------

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, ஏனையவற்றினுள் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் திருமண நிதி உதவித் தொகையான ரூ.25,000/–உடன், கூடுதலாக மணப்பெண்ணிற்கு திருமாங்கல்யம் செய்ய நான்கு கிராம் தங்கம் (1/2 சவரன்) 22 காரட்டில் இலவசமாக வழங்கவும் அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வேறு திருமண நிதியுதவி வழங்கும் திட்டங்களின் கீழ் பட்டயம் மற்றும் பட்டப்படிப்பு படித்த மாற்றுத் திறனாளிகளுக்கு திருமண உதவித் தொகை ரூ.25,000/–லிருந்து ரூ.50,000/– உயர்த்தி வழங்கவும் இதனுடன் மணப்பெண்ணிற்கு ஒரு திருமாங்கல்யம் செய்ய நான்கு கிராம் தங்கம் (1/2 சவரன்) 22 காரட் இலவசமாக வழங்கவும் அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 2015–2016 ஆம் நிதியாண்டில் மாற்றுத் திறனாளிகளுக்கான நான்கு வகையான திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் மொத்தம் 858 பயனாளிகளுக்கு உதவித் தொகை வழங்க மற்றும் திருமாங்கல்யம் செய்ய தேவைப்படும் மொத்தம் செலவினம் ரூ.4,23,96,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையில் வழங்கப்படும் ஐந்து வகையான திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ்,

திருமாங்கல்யம் செய்வற்கான தங்க நாணயம் 4 கிராமிலிருந்து 8 கிராமாக 23.05.2016 முதல் உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் 4 வகை திருமண உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் 23–05–2016க்குப் பின் திருமணம் செய்த மாற்றுத் திறனாளிகள் பயனடையும் வகையில், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையில் வழங்கப்படுவது போல பாகுபாடின்றி மாற்றுத் திறனாளிகளுக்கும் மற்றவர்களுக்கு வழங்கப்படுவது போல 8 கிராம் தங்க நாணயம் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். 2016–2017 ஆம் நிதியாண்டில் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் நான்கு வகையான திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ், 469 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக தெரிவித்து, திட்டம் வாரியாக பயனாளிகளின் விவரங்களை பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

| வ. எண். | திட்டம் | ரூ.25,000/– | ரூ.50,000/– | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | பார்வையற்றோருக்கான திருமண உதவி | 22 | 11 | 33 |
| 2. | காது கேளாதோருக்கான திருமண உதவி | 61 | 16 | 77 |
| 3. | கை அல்லது கால் பாதிக்கப்பட்டோருக்கான திருமண உதவி | 131 | 109 | 240 |
| 4. | மாற்றுத் திறனாளிகளை திருமணம் செய்யும் மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண உதவி | 59 | 60 | 119 |
| | **மொத்தம்** | **273** | **196** | **469** |

மேலும், 2016–2017 ஆம் நிதியாண்டில் மாற்றுத் திறனாளிகளுக்கான நான்கு வகையான திருமண நிதியுதவி திட்டங்களின் கீழ் 469 பயனாளிகளுக்கு ரொக்கமாகவும், மற்றும் பத்திரமாகவும் வழங்கிட தேவைப்படும் நிதி ஒதுக்கீடு ரூ.1,66,25,000/– மற்றும் 23–05–2016க்கு முன் திருமணம் செய்து கொண்ட 424 பயனாளிகளுக்கு 4 கிராம் தங்க நாணயங்களுக்கானத் தொகை ரூ.55,12,000/– மற்றும் 23–05–2016–க்குப்பின் திருமணம் செய்து கொண்ட 45 பயனாளிகளுக்கு 8 கிராம் தங்க நாணயங்களுக்கானத் தொகை ரூ.11,70,000/– ஆக மொத்தம் ரூ.2,33,07,000/– நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வழங்குமாறும் மேலும், அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்களையும், முதுநிலை அடிப்படையில் திருமண உதவித் தொகை வழங்கிட அறிவுறுத்துமாறும், 469 தங்க நாணயங்களுக்கு தேவையான தொகை ரூ.66,82,25,000/–ஐ தன் வைப்புக் கணக்கில் பற்று வைத்து நிதி ஒதுக்கீடு செய்ய ஆணை வழங்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், மேற்கண்ட நான்கு வகையான திருமண உதவித் திட்டங்களிலும் சாதாரண மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் நிதியுதவித் தொகை ரூ.25,000/–ல் ரூ.12,500/–ஐ காசோலையாகவும், ரூ.12,500/–ஐ தேசிய சேமிப்பு பத்திரமாகவும் வழங்கப்படுவதாகவும், பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு படித்த மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் நிதியுதவி ரூ.50,000/–ல் ரூ.25,000/–ஐ காசோலையாகவும், ரூ.25,000/–ஐ தேசிய சேமிப்பு பத்திரமாகவும் வழங்கப்படுவதாகவும், ஆனால் சமூக நலத் துறையில் வழங்கப்பட்டுவரும், திருமண உதவித் திட்டத்தில் தற்போது பயனாளிகளுக்கு முழுத் தொகையும் ரொக்கமாக வழங்கப்படுவதைப் போல, மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கும் தொகையினையும் ரொக்கமாக பெற்று வழங்கவும், 469 தங்க நாணையங்களையும் சமூக நலத் துறை மூலம் கொள்முதல் செய்திடவும் ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.** மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்து அதனை ஏற்று,

i. சமூக நலத் துறையில், ஐந்து வகையான திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ், திருமாங்கல்யம் செய்வதற்கான தங்க நாணயம் 4 கிராமிலிருந்து 8 கிராமாக 23.05.2016 முதல் உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது போன்று இத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் நான்கு வகையான திருமண நிதியுதவி திட்டத்திற்கு திருமாங்கல்யம் செய்ய வழங்கப்படும் தங்க நாணயம் 4 கிராமிலிருந்து 8 கிராமாக 23.05.2016 முதல் உயர்த்தி வழங்கி அரசு ஆணையிடுகிறது. மேலும், 2016–2017 ஆம் நிதியாண்டில் மாற்றுத் திறனாளிகளுக்கான நான்கு வகையான திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் 273 பயனாளிகளுக்கு ரூ.25,000/– வீதம் நிதியுதவி வழங்க ரூ.68,25,000/–ம் (ரூபாய்அறுபத்தெட்டு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) மற்றும் பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு படித்த 196 பயனாளிகளுக்கு ரூ.50,000/– வீதம் நிதியுதவி வழங்க ரூ.98,00,000/–ம் (ரூபாய் தொண்ணுற்று எட்டு இலட்சம் மட்டும்) என மொத்தம் 469 பயனாளிகளுக்கு உதவித் தொகை வழங்க ரூ.1,66,25,000/–(ரூபாய் ஒரு கோடியே அறுபத்தாறு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்)மும் திருமாங்கல்யத்திற்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் 22.05.2016 வரை திருமணம் செய்து கொண்ட 424 பயனாளிகளுக்கு 4 கிராம் திருமாங்கல்யம் செய்ய ரூ.55,12,000/–மும் (ரூபாய் ஐம்பத்தைந்து இலட்சத்து பன்னிரெண்டாயிரம் மட்டும்) மற்றும் 23–05–2016 முதல் திருமணம் செய்து கொண்ட 45 பயனாளிகளுக்கு 8 கிராம் திருமாங்கல்யத்திற்கான தொகை ரூ.11,70,000/– (ரூபாய் பதினோறு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) மும் என மொத்தம் 469 பயனாளிகளுக்கு திருமாங்கல்யம் செய்ய ரூ.66,82,000/– (ரூபாய் அறுபத்தாறு இலட்சத்து எண்பத்திரெண்டாயிரம் மட்டும்) உடன் இத்திட்டத்திற்கு தேவைப்படும் ரூ.2,33,07,000/–ஐ (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்து மூன்று இலட்சத்து ஏழாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

ii. திருமாங்கல்யம் செய்ய ஒப்பளிப்பு வழங்கப்படும் தொகை ரூ.66,82,000/– ஐ தொடக்க நிதியாக பற்று வைத்து, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் பெயரில் தன்வைப்பு கணக்கு ஒன்று மீள துவக்கி, அதில் இத்தொகையை தொடக்க நிதியாக பற்று வைத்திட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

iii. இத்திட்டத்தின் கீழ் முதுநிலை அடிப்படையில் திருமண உதவித் தொகை வழங்கிட, அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்களையும், அறிவுறுத்துமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

iv. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவித் தொகை ரூ.25,000/–ல் ரூ.12,500/–ஐ காசோலையாகவும், ரூ.12,500/–ஐ தேசிய சேமிப்பு பத்திரமாகவும், மற்றும் நிதியுதவித் தொகை ரூ.50,000/–ல் ரூ.25,000/–ஐ காசோலையாகவும் ரூ.25,000/–ஐ தேசிய சேமிப்பு பத்திரமாகவும் வழங்கும் நடைமுறைகளை தொடர்ந்து பின்பற்றுமாறும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரைக் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் திருமாங்கல்யத்திற்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் 469 பயனாளிகளுக்கு திருமாங்கல்யம் செய்ய வழங்கப்படும் தங்க நாணயங்களை சமூக நலத் துறை மூலம் கொள்முதல் செய்யுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 6—ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கானதொகை பின்வரும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:—

| வ.எண். | கணக்குத் தலைப்பு | உதவித் தொகை |
|---|---|---|
| 1. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்—02 சமூக நலன்— 101 மாற்றுத் திறனாளிகள் நலன்— மாநிலச் செலவினங்கள் DC பார்வையற்றோரை திருமணம் செய்யும் குறைபாடற்றவர்களுக்குச் சலுகை—09 உதவித் தொகை—03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (து.தொ.கு2235—02—101—DC—0939) | 22 x ரூ.25,000/— =ரூ.5,50,000/—<br><br>11 x ரூ.50,000/— = ரூ.5,50,000/— (துங்க நாணயம் ரூ.4,94,000/—) மொத்தம் ரூ.15,94,000/— |
| 2. | 2235 சமூக பாதுகாப்பும் நலனும்—02 சமூக நலன்— 101 மாற்றுத் திறனாளிகள் நலன்— மாநிலச் செலவினங்கள் DD- காது கேளாத மற்றும் வாய் பேசாதவர்களை திருமணம் செய்ய முன்வரும் குறைபாடற்றவர்களுக்குச் சலுகைகள்—09 உதவித் தொகை—03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (து.தொ.கு2235—02—101—DD—0937) | 61 x ரூ.25,000/— =ரூ.15,25,000/—<br><br>16 x ரூ.50,000/— = ரூ.8,00,000/— (துங்க நாணயம் ரூ.11,05,000/—) மொத்தம் ரூ.34,30,000/— |
| 3. | 2235 சமூக பாதுகாப்பும் நலனும்—02 சமூக நலன்— 101 மாற்றுத் திறனாளிகள் நலன்— மாநிலச் செலவினங்கள் CV— மாற்றுத் திறனாளிகளை மணந்து கொள்ளும் குறைபாடற்றவர்களுக்குச் சலுகை—09 உதவித் தொகை—03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (து.தொ.கு2235—02—101—CV—0932) | 131 x ரூ.25,000/— = ரூ.32,75,000/—<br><br>109 x ரூ.50,000/— = ரூ.54,50,000/— (துங்க நாணயம் ரூ.33,67,000/—) மொத்தம் ரூ.1,20,92,000/— |
| 4. | 2235 சமூக பாதுகாப்பும் நலனும்—02 சமூக நலன்— 101 மாற்றுத் திறனாளிகள் நலன்— மாநிலச் செலவினங்கள் MM மாற்றுத் திறனாளிகளை மணந்து கொள்ளும் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகை—09 உதவித் தொகை—03— குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (து.தொ.கு 2235—02—101—MM—0930) | 59 x ரூ.25,000/— = ரூ.14,75,000/—<br><br>60 x ரூ.50,000/— = ரூ.30,00,000/— (துங்க நாணயம் ரூ.17,16,000/—) மொத்தம் ரூ.61,91,000/— |
| | மொத்தம் | ரூ.2,33,07,000/— |

| | | |
|---|---|---|
| | Contra credit to<br>தங்க நாணயம் வாங்குவதற்கான செலவினம்<br>K Deposits on Advances (B) Deposits not bearing interest 8443-00-Civil Deposits-106 – Personal Deposits AA – Personal Deposits.<br>(DP Code 8443-00-106-AA-000F)(Receipts)<br>(DP Code 8443-00-106-AA-0005)(Outgo) | ரூ.66,82,000/– |

8. மேலே பத்தி 6(i)ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவிற்கான நிதி 2017–18 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். நிதியொதுக்கம் செய்யப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகின்றது. மேலும் 2017–18 திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்க மதிப்பீடு கருத்துருவை நிதித் துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் கருத்துருவை நிதித் துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்பிடுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், இச்செலவினம் குறித்து சட்டப் பேரவையின் பார்வைக்கு கொண்டு வரும் பொருட்டு, 2017–18 ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்த்திட கருத்துருவினை உரிய நேரத்தில் நிதி(சந) துறைக்கு அனுப்புமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா. எண்.18830/நிதி(சந)/2017, நாள் 20.04.2017–ல் பெறப்பட்ட ஒப்புதலின்படி வெளியிடப்படுகிறது. மற்றும் இதற்கான கூடுதல் நிதியொதுக்கம் 286 (இருநூற்றி எண்பத்தி ஆறு)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)**

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநிலக் கணக்காயர் (இருப்பு), தலைமைச் செயலகம், சென்னை–9.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)

**<u>நகல்:–</u>**

நிதி (சந) /வசெ. பொ. II)துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.

முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
இயக்குநர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, அருணாச்சலம் தெரு,
சிந்தாதரிப்பேட்டை, சென்னை.
முதன்மைச் செயலாளர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

**(மா. சுப்ரமண்ய பிள்ளை)**
**அரசு சார்புச் செயலாளர்.**